**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.2/2021**

**2025 ஆம்** வருடம் நவம்பர் மாதம் 10 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோசப் ஜான் பிரிட்டோ | ஜாதி | : | |
| த.பெ | : | மரிய சூசை | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | நி. பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 57/2025 |
| தேதி | : | 10.11.2025 | | | |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 11வது பிரதிவாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண வாக்குமூலத்தை பிரதிவாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 30.11.1969 பாகப்பிரிவினை ஆவணம் அசல் **(பி.வா.சா.ஆ.4/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. அந்தோணி பெயரில் உள்ள தனிப்பட்டா கணினி நகல் **(பி.வா.சா.ஆ.5/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 11 ம் பிரதிவாதி பெயரில் உள்ள தனிப்பட்டா-3 கணினி நகல் **(பி.வா.சா.ஆ.6/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. அந்தோணி மற்றும் 9 முதல் 11 பிரதிவாதிகள் பெயர்களில் உள்ள கூட்டுப்பட்டா - 2 கணினி நகல் **(பி.வா.சா.ஆ.7/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 1990 முதல் 2019 வரை கிஸ்தி இரசீதுகள்-15 அசல் **(பி.வா.சா.ஆ.8/DW.1)**

ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜர் இல்லை. சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor